**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .**No.** 1025/2023

**2024 – ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18–ம் தேதி வெள்ளிகிழமை ம.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திருமதி. R.புவனேஸ்வரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.** : 1 | | | |
| **பெயர்** : **முத்துவேல்** | | **தொழில்** : **ஓட்டுநர்** | |
| **த/பெ.** : **பிச்சைபிள்ளை** | | **வட்டம்** : அரியலூர் | |
| **கிராமம்** : க. பொய்யூர் | | **வயது** : 40 | |

**18.10.2024**

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 27.06.2023 தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளையின் காசோலை எண் ( 676650) **ம.சா.ஆ. 1** ஆகும். 30.06.2023 தேதியிட்ட அரியலூர் கிளை இந்தியன் வங்கியால் கொடுக்கப்பட்ட காசோலை திருப்பப்பட்ட மெமோ **ம.சா.ஆ.2** ஆகும். 08.07.2023 தேதியிட்ட எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** ஆகும். எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **ம.சா.ஆ. 4** ஆகியவற்றை ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.